





ஈ.கே.ராஜகோபாலின்

# ஆழிக்குமரன்

## நூல் வெளியீடும்
## ஷர்மினியின் பரதநாட்டியமும்

*SCARBOROUGH, CANADA* *WOBURN COLLEGIATE* *13 - 08 - 1994*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சந்ர மௌலீஸ்வராய நம

# சிவாகமக் கிரியா பீடம்

## தொலைபேசி இல:(416) 724 7480







★திருமணம் ★பதிவுத் திருமணம் ★பூப்புனித நீராட்டு

★புண்ணியாக வாசனம் ★வீடு குடிபுகுதல் ★கடைதிறப்பு லக்ஷ்மி பூஜை

★சிரார்த்த மஹாளயாதி பிதிர் ★பூஜைகள்

★ஜோதிஷம் பார்த்தல் ★ஜாதகக் குறிப்பு எழுதுதல்

★விவாகப் பொருத்தம் பார்த்தல் ★மஹா கணபதி ஹோமம்

★ஐயாதி ஹோமம் ★ஆயுஷ்ய ஹோமம்

★தாரதோஷ மாங்கல்ய தோஷ ★நிவர்த்தி ஹோமம்

யாவற்றிற்கும்

## சிவாகமக் கிரியா பீடம்

முத்து மணவறையா? தலை அலங்கார ஜோடனைகளா?
பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? கல்யாண மண்டபமா?
ஜடைநாகமா? ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா?
உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

## சிவஸ்ரீ ச. கு ஸ்ரீதர குருக்கள்

(கண்ணன் ஐயர்)

திருமணப் பதிவாளர்

நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

***36, PENNYHILL DR, SCARBOROUGH, ONTARIO***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என் இனிய தமிழ் நெஞ்சங்களே!*
*நெஞ்சம் நிறைந்த வணக்கங்கள்.*

மீண்டும் என் சொந்தங்களைச் சந்தித்து, உரிமையோடு உறவாடக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தைப் பாக்கியமாகவே கருதுகிறேன்.

பிறந்து, தவழ்ந்து, எழுந்து அளைந்து ஆடி ஓடி விளையாடி உறவுகளோடு வாழ்ந்த அந்த மண்ணைப் பிரிந்து, ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால், அகதியாகத் தஞ்சம் புகுந்த லண்டனில் பல ஆண்டுகள் கழித்த எனக்கு, கடந்த ஆண்டு கனடா வந்தபோது மண்ணில் வாழ்ந்த உணர்வுகள் நெஞ்சை நிறைத்தன.

ஈழ பூமியில் வீரத்தின் விளைநிலம் ஒன்றில் இருந்து, 1930 ஆம் ஆண்டில் உள்ளூர் விருட்சமான வேப்ப மரங்களில் உருவான, அவ்வூரிலே பிறந்து வளர்ந்த சுந்தரம் என்ற மேஸ்திரியாரினால், அழகாக நேர்த்தியாக அமைக்கப்பட்ட "அன்ன பூரணி அம்மாள்" என்ற தூய தமிழ் அணங்கின் நாமம் கொண்ட இரட்டை பாய்மரக் கப்பலில் நமது கடலோடிகள் அமெரிக்கா சென்று வெற்றிக் கொடி நாட்டிய சரித்திரத்தை அப்போது உங்கள் முன் நூலாகப் படைத்தேன்.

பரந்து பட்ட பசுபிக் சமுத்திரத்தை தாண்டி பனை உயரத்திற்கு மேலாக அலை அடித்து எழுந்து கொந்தளித்துக் கொண்டிருக்கும் அத்திலாந்திக் சமுத்திரத்தினூடாக ஐந்து மைல்கள் ஆழமுள்ள அலை கடல்களில் வீரசாகசப் பயணம் செய்து எவ்வித தடுமாற்றமும் இல்லாமல், அடலேறுகளாகப் பவனிவந்து, அமெரிக்காவின் "பொஸ்டன்" துறைமுகத்தை வந்தடைந்த வரலாறு இன்னமும் மெய்சிலிர்க்க வைக்கிறது.

இருட்டடிப்புக்குள்ளான இந்த வரலாற்றை "வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள்" என்ற பெயரில் நூலாக்கியபோது, இந்த நூல் தமிழர்கள் வாழும் உலகமெல்லாம் சென்றடையவேண்டும் என கனவு கண்டேன்.

ஐரோப்பிய நாடெல்லாம் நேரில் சென்ற அந்தக் கடலோடிகள் சாதனை நிலைநாட்டிய அமெரிக்காவிலேயே கௌரவிக்கப்பட வேண்டுமென்ற என் கனவு நனவாகியது.

அமெரிக்கா என்ற அந்தப் பூமியையும், அந்தக் கடலோடிகளின் சாதனை நிறைவேற்றப்பட்ட "பொஸ்டன்" துறைமுகத்தையும் பார்த்து, கனடா என்ற நிலப்பரப்பில் உருவாகிக்கொண்டுவரும் "குட்டித் தமிழீழத்தை" யும் தரிசித்து, தமிழ் இதயங்களோடு உறவாடியதை நினைத்துப் பார்க்கிறேன்.



ஈ.கே.ராஜகோபால்

இப்போது தமிழீழத்தில் பிறந்து உலக சாதனைகள் பலவற்றை "கின்னஸ்" புத்தகத்தில் பதித்த மாபெரும் நீச்சல் வீரன் ஆனந்தனின் கதையை "ஆழிக்குமரன்" என்ற நூலாக உங்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

ஆங்கிலக் கால்வாயை இருமுறை நீந்திக் கடந்து சாதனை நிலைநாட்ட முயற்சித்தபோது தன் வாழ்வை ஆழியிலே அழித்துக்கொண்ட அவனது கதையை நூலாக உங்களோடு பகிர்ந்துகொள்வதில் பெரு மகிழ்வுறுகிறேன்.

உலக அரங்கில் ஈழத் தமிழர்களின் புகழை உயர்த்திய மாவீரன் அவன்! முப்பத்தெட்டு மைல் நீளமுள்ள பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து தனது முதலாவது சாதனையை நிலைநாட்டியபோது ஆனந்தனுக்கு வயது பதினெட்டு.

கொந்தளித்து ஆர்ப்பரிக்கும் அலைகளையும், ஆளையே விழுங்கிவிடும் "சுழி" களையும் எதிர்த்து 42 மணிநேரம் சமுத்திரத்தில் சஞ்சரித்து இந்தச் சாதனையைச் செய்தான்.

இந்தச் சாதனை வீரனுக்கு அப்போது நடந்த வீர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LOW COST

# CARPET & INTERIOR'S

# WAREHOUSE

- ★ CARPET
- ★ CERAMIC TILES
- ★ HARD WOOD FLOOR
- ★ KITCHEN CABINETS
- ★ THERMAL WINDOWS
- ★ DOORS
- ★ PORTABLE & CENTRAL VACCUM
- ★ DRAPERIES
- ★ VERTICAL BLINDS
- ★ VENETIAN BLINDS
- ★ ITALIAN LEATHER SOFA
- ★ LIVING ROOM SET
- ★ BED ROOM SET
- ★ MATTRESS, FRIDGE, STOVE, WASHER, DRYER, FREEZER AND MUCH MORE...

PARA - PAINTS

**CALL US FOR COMPLETE HOME RENOVATION**

**SHOW ROOM OPEN ONLY BY APPOINTMENT**

**721 PROGRESS AVE, UNIT. A, SCARBOROUGH, ONT.**

**உரிமையாளர்:** சபேசன் காங்கேசு

***TEL: (416) 605-1990***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்பில், "ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடப்பேன்" என்று அவர் சபதமிட்டார். இருபது ஆண்டுகளுக்குப் பின் அந்த ஆங்கிலக் கால்வாயில் தன் சாதனையை நிறைவேற்றக் குதித்தார்.

அச்சமயத்தில் ஆனந்தனது ஆங்கிலக் கால்வை நீச்சல் சாதனை முயற்சியை ஒட்டி 22.04-1984 ஆம் ஆண்டு ஞாயிறு தினகரன் வார மஞ்சரியில் "ஆங்கிலக் கால்வாயில் ஆழிக்குமரன்" என்ற சிறப்புக் கட்டுரை யொன்றை எழுதினேன்.

அந்தக் கட்டுரையின் இறுதியில், "கடலோடு கடலாக ஆனந்தன் போவாரேயொழிய நீச்சலை ஒரு போதும் கைவிட மாட்டார்" என்று குறிப்பிட்டிருந்தேன். அப்படியே நடந்தது! நீச்சலைக் கைவிடாது மாவீரனாகவே மாண்டார்! எனக்கு அவரை மிக நன்றாகவே தெரியும். ஆத்மார்த்தமான அந்த உறவு மூலம் என் உள்ளத்தில் நண்பனாக மட்டுமல்ல, மாவீரனாகவும் வாழ்பவன்.

உலகத் தமிழர்களில் ஆழிக்குமரன் ஆனந்தனைத் தவிர வேறு யாருக்கும் இந்தப் பெருமை சேரமுடியாது.

மண்ணையும் மண்ணின் மக்களையும் நேசிக்கும் லட்சிய நோக்கத்தோடுதான் எனது படைப்புகளை வெளியிட்டு வருகிறேன். தாயகத்துச் சொந்தங்களையும், அப்பூமியின் விடுதலையையும் நெஞ்சில் நிறுத்தி, ஈழத் தமிழர்களின் இதயக் குரலாக லண்டனிலிருந்து வெளிவரும் "ஈழகேசரி" கனடாவிலுள்ள நமது எழுத்தாளர்களின் ஆக்கங்க ளையும் தாங்கி வெளிவருகிறது. அத்தோடு கனடாவிலும் இப்போது ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

எது எப்படியிருந்தாலும், நாம் எங்கு வாழ்ந்தாலும், எமது மண் தலைநிமிர்ந்து தனித்துவத்தோடு உயர்ந்தால் மட்டுமே எமக்கு நிறைவு தரும் என்பதை மறக்கக்கூடாது.

தமக்கென்று ஒரு நாடு இல்லாமல், எங்கெல்லாமோ ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்த யூதர்களுக்கு இறுதியாக என்ன நடந்தது?

நிம்மதியாக வாழ்வதாக எண்ணிக் கொண்டிருந்த யூத மக்களுக்கு கிடைத்த "பரிசு" நமக்கு நல்ல பாடம்! இரண்டாம் உலகப்போரில் அவர்கள் அணுவணுவாகச் சித்திரவதை செய்யப்பட்டு சாகடிக்கப்பட்ட "கதைகள்" இப்போதும் நெஞ்சைப் பதைபதைக்க வைக்கும்.
அவர்களைப்போல உலக நாடுகளுககு எல்லாம் ஓடி ஓடி, அலைந்து திரிந்து தற்காலிக "சுகங்களோடு" கை நிறையச் சம்பாதிப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் நாம் எல்லாம் யூதர்களுக்கு நடந்ததைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்!

உகண்டாவில் வாழ்ந்த இந்திய மக்களுக்கு நடந்தது நமக்கும் ஏன் நடக்கக் கூடாது?

தமிழீழம் எங்கள் தாய்மண்.
அந்த மண்ணுக்கு சொந்தமானவர்கள் நாங்கள்.

இந்த உணர்வோடு உங்களுடன் மனம் விட்டுப்பேசி, ஒன்றுபட்ட உணர்வைத் தோற்றுவிக்கும் இதமான இந்த மாலைப் பொழுதை ஏற்பாடு செய்து தந்த நல்ல இதயங்களுக்கு நன்றி சொல்கிறேன்.

உங்கள் அன்பையும் ஆதரவையும் என்றென்றும் மறவேன்!
மீண்டும் சந்திப்பேன்!
நன்றி! நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

*அன்புடன்,*
*- ராஜகோபால்*

## நெஞ்சம் திறந்து கூறுகின்றோம்.....

- எங்கள் அன்பான அழைப்பை ஏற்று விழாக் காண வந்த அனைத்து இதயங்களுக்கும்,
- ஆசிகூறி சிறப்புரைகள் வழங்கி விழாவைக் கௌரவித்த பேரறிஞர்களுக்கும்,
- விழாவுக்கு சிறப்புத் தந்த பிரதம விருந்தினருக்கும்,
- நடன நிகழ்ச்சிகளுக்கு உயிரூட்டிய கலைஞர்களுக்கும், நிகழ்ச்சித் தொகுப்பாளருக்கும்,
- விழாச் சிறக்க வாழ்த்தி நின்று விளம்பரம் தந்தோருக்கும்,
- விழாவின் வெற்றிக்கு தன்னலமற்ற பங்களிப்பைச் செய்த பத்திரிகைகளுக்கும், வானொலிகளுக்கும், தொலைக்காட்சிக்கும்,
- இந்த மலரை அழகுற அமைத்துத் தந்த நந்தா பப்பிளிகேஷன் நிறுவனத்துக்கும்,
- இவ்விழா சிறக்க தோளோடு தோள் கொடுத்து உதவிய கலை,இலக்கிய நண்பர்கள் அனைவருக்கும்

## ........ என்றும் எமது நன்றிகள்

- விழாக்குழு -

12 Keon Place, Scarborough
(416) 283 4546

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI SIVA JEWELLERY

# ஸ்ரீசிவா ஜுவலறி



**Tel: (416) 531 4867 Fax: (416) 531 6527**

உலகின் முதல் தரமான தங்க பாளங்களை பல விதமான வடிவங்களில் பொற் காவியமாகப் படைப்பதில் பல்லின மக்களின் பாராட்டுக்களைப் பெற்றுவரும் மதிப்புயர் ஸ்தாபனம்

உங்களின் பழைய புதிய தங்கப்பவுண் எதுவாயினும் தராதரமான தங்கமாக்கி திறமான ஆபரணங்களைத் தயாரித்தும் 22K, 24K ஸ்ரீசிவா என்று முத்திரையும் பொதித்து தருவதில் முதல்தரமான நிறுவனம்.

பல வருட அனுபவங்களுடன் இரத்தின கற்கள் பற்றிய திறமைப் பயிற்சியும் பெற்றவர்களின் முகாமைத்துவத்தில் இயங்கும் ஒரேயொரு நிறுவனம்.

தகமை, தராதரம், நற்சேவை போன்றவற்றிற்கான ஒன்ராரியோ அரசின் விருதினைப் பெற்ற ஒரேயொரு தமிழ் நகை மாளிகை.

**721 BLOOR ST. W., TORONTO, ONTARIO. M6G 1L5**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழீழத்திற்கு வெளியே வாழும் மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர்

இதயத்தால் பேசும் திறமை, இதயங்களைப் பேசவைக்கும் ஆற்றல், உயர்ந்த நுண்மதி, சீரிய ரசனை, ஆழ்ந்த அவதானம், தான் அவதானித்தவற்றை அப்படியே பின்பற்றாத தனித்துவம், எளிமை, இனிமை, நேயம், கனிவு.

இவை அனைத்தையும் தனது வீழாத புகழுக்கு வேலியாகக் கொண்டிருப்பவர்தான், தமிழீழத்திற்கு வெளியே பத்திரிகை உலகில் வாழும் மூத்த பத்திரிகையாளரான இளையதம்பி குமாரசாமி ராஜகோபால்.

ஒருமுறை அவருடன் பழகியவர்களை அவரால் என்றுமே மறக்கமுடிவதில்லை. அப்படித்தான் அவருடன் பழகிய எவருமே அவரை இலகுவாக மறந்து போகவும் முடிவது மில்லை. அன்யோன்னியமாக எவருடனும் இலகுவில் உறவாடுவதால் எவருமே அவருக்கு அன்னியராக இருப்பதில்லை. பரிச்சயம் இல்லாதவர்களோடும் சகஜமாகப் பழக அவரது இதயத்தால் மட்டுமே முடியும்.

அவரது விரல்கள் வேகமாகச் செயல்படுவதுடன் வினோதமாக புரியும் மாயாஜாலம் கண்டு என் புருவங்கள் ஆச்சரியத்தால் பாதி நெற்றியை பல தடவைகள் தொட்டுள்ளன.

- மனசுக்குள் சுளுக்கெடுக்கும் ஆற்றல் பெற்றவை அவரது எழுத்துக்கள்!
- இதயத்தைத் துளைத்துத் துளைத்துத் துவாரமிடாத கண்ணியம் மிக்கவை அவரது வார்த்தைகள்!!

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்திலேயே "விவேகி" என்ற மாத சஞ்சிகைக்கு ஆசிரியரானார். புதிய உணர்வலைகள் பொங்கி இசைபாட, வேகமாகப் புகழ் அவரை நாட ஆரம்பித்தது. மாணவர் உலகின் குதூகலம் அதிகரித்தது. "விவேகி" யின் கேள்வி-பதில் பிரமாதமாக வரவேற்கப்பட்டுப் பிரமாண்டமான பாராட்டுதல்களை ராஜகோபாலுக்குப் பெற்றுக்கொடுத்தது.

"விவேகி"யுடன் மட்டும் தனது அறிவாற்றலை மட்டுப்படுத்தி விடவில்லை ராஜகோபால். பிரபல பழம் பெரும் ஈழ எழுத்தாளர் தி. வரதராஜன் (வரதர்) வெளியிட்ட புதினத்தில் பகுதி நேரமாகப் பணிபுரிந்தார். கண்டியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "செய்தி" இதழுக்கு யாழ் நிருபராக கடமை யாற்றினார்.

பத்திரிகைத்துறையில் வாழநினைத்தது அவரது விருப்பமாக இருந்தது!
பத்திரிகை துறையை வாழ வைப்பது அவரது இலட்சியமாக அமைந்தது!!

இதனால் பாதியிலே பௌர்ணமியானது அவரது பாடசாலை வாழ்வு!

ஒவ்வொரு கலைஞனும் பரபரப்பான அந்த வியர்வைச் சிறையிலிருந்து விடுபட நினைப்பதற்கு ராஜகோபாலும் விதிவிலக்கு அல்லவே!!
புகழ்ச்சியினால் பூரித்து விடாமல் இருக்கவும், விமர்சனத்தால் வீழ்ந்து விடாமல் நிலைக்கவும் பத்திரிகைத்துறை அவருக்கு நிறைய போதித்தது!

அதனைால் படித்தவனைக் காட்டிலும் கற்றவன் வாழ்க்கையை ஜெயித்து விட முடியும் என்பதை நன்கு புரிந்து கொண்டார்.

உலகத்தில் விரல்விட்டு சொல்லக் கூடிய பழைய மொழி களில் குரல் விட்டுச் சொல்லக் கூடியது தமிழ். அதன் இனிமையை இதயங்களுக்குக் காட்ட வல்ல பத்திரிகைத் தொழிலை அவர் தேர்ந்தெடுத்தார்.

மனசில் இருக்கும் துருக்களையெல்லாம் துலக்கிவிடும் ஆற்றல் அத்தொழிலுக்கு உண்டு என்பதை உளப்பூர்வமாகவே நம்பினார்.

முழு நேரப் பத்திரிகையாளர் ஆனார்! அவரது ஆற்ற ல்களையும் அனுபவங்களையும் உணர்வுகளையும் உந்தல்களையும் ஈழநாடு அரவணைத்துக் கொண்டது. விளாசித் தள்ளினார். வாசகர்களைக் கவரும் வகையில் பலரப்பட்ட விஷயங்களை எழுதுவதில் வல்லவராக உயர்ந்தார். செய்திகளுக்கு உயிரூட்டினார். கலைஞர்களுக்கு உயிர் கொடுத்தார். இவரால் காகிதங்கள் கௌரவப்பட்டன.

அனாதரவான ஒரு நிலப்பகுதி உல்லாசப் பயணிகளைக் கவரும் மவுசைப் பெற்றுத் கொடுத்தது அவரின், "பருத்தித் தீவில் ஒரு ராஜா?". வாழ்க்கை மறுக்கப்பட்டவர்களுக்கு வாழ்வு கொடுத்தது அவரது தொடரான "யாரை நம்பி நாம் பிறந்தோம்?"

- கலைஞர்களை நெறிப்படுத்தவும் சரிப்படுத்தவும் கூடிய வலுமிக்க சக்தியாக அமைந்தது அவர் எழுதிய நம்நாட்டுக் கலைஞர்கள். அழிக்கும் அவதூறுகளை அள்ளி வீசாத ராஜகோபாலிடம் ஆளாக்கும் அபிமானம் அதிகரித்திருந்தால் பல கலைஞர்கள் ராஜகோபாலின் பார்வையால் தலைதூக்கினர்.பத்திரிகை அலுவலகத்திற்கு காலுடன் நுழையும் கலைஞர்கள் ராஜகோபாலை சந்தித்தபின் இறகுகளுடன் திரும்புவர்.

செய்திகளை எடுப்பதிலும், அவற்றை ஏற்றமுறையில் தயாரிப்பதிலும் ஏற்றமுடன் வாசகரிடம் சேர்ப்பதிலும் அவரிடம் ஒரு தனித்துவம் என்றும் இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

ம்

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்
கனேடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு
**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் (ஐயாமணி)**
(புங்குடுதீவு - 10)

## (416) 266 3333



**அனைத்து இந்து மத கிரியைகள் சேவைகளுக்கும், திருமணம் போன்ற மங்களகரமான வைபவங்களுக்கு வேண்டிய அனைத்து தேவைகட்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். இத்துடன் குறைந்த வாடகையில் ஸ்காபுரோ, ரொறன்ரோ இடங்களில் மண்டப வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.**

**628 E, BIRCHMOUNT ROAD, SCARBOROUGH, ONTARIO, M1K 1P9**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணைமடுக் குளத்திற்குப் பாடசாலையுடன் சுற்றுலாச் சென்ற ஒரு பிஞ்சு மாணவி பரிதாபமாக அதற்கு பலியாகித் தனது வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்த தகவல் ராஜகோபாலின் அடிமனதை விம்மி விம்மி அழ வைத்ததால், அடுத்தநாள் செய்தி அனைத்து இதயங்களையும் பிசைந்து பிழிய வைத்தது.பலரது இதய துடிப்புகளை நிற்க வைத்து நிற்க வைத்து துடிக்க வைத்தது.

ஏழு வயதுச் சிறுமியொருத்தி தனது இளைய சகோதரிகள் மூவருக்குத் தாயாய் - தந்தையாய் - உற்றாராய் - சுற்றாராய் இருக்கும் பாழாய்ப்போன வாழ்வு கண்டு கொதித்த ராஜகோபாலின் பேனா சாரை சாரையாய் இரத்த அருவி கொட்டியதால் கவனிப்பாரற்றுக் கிடந்த அந்த ஏழு வயதுத் தாய்க்கு நிவாரணம் கிடைத்தது. ராஜகோபாலின் அச் செய்தியின் பின்னர் திரட்டப்பட்ட ரூபாய் 25,000 நிவாரண நிதியினை 1000 ரூபாய் காசோலை அனுப்பி ஆரம்பித்து வைத்தவர் அப்போதைய தபால் அமைச்சர் செல்லையா குமாரசூரியர்.- மரணத்தைக் கூட மரிக்க வைக்கும் ஆற்றல் ராஜகோபாலிடமிருந்தது!

இதுவரை நான்கு நூல்களைத் தந்துள்ள ராஜகோபாலின் முதலாவது வெளியீடு. "மக்கள் பிரதமர் ஸ்ரீமாவோ!"

சில வெற்றிகள் கூட விலாசமற்றுப் போய்விடுகின்றன. ஆனால் சில தோல்விகளுக்குக் கூடச் சரித்திரம் உண்டு என்பதை நன்கு உணர்த்தியது அவரது இரண்டாவது நூலாகிய வி.பி. யின் சோவியத் பயணக்கதை.

கப்பலோட்டிய தமிழர்கள் என்ற அவரது மூன்றாவது நூலை வாசிக்கும் ஆற்றல் மட்டும் பசுபிக் சமுத்திரத்திற்கு இருந்திருக்குமேயானால் என்றோ அது பாக்கு நீரிணையுடன் சங்கமித்திருக்கும்.

சோதனையின் கொம்பு முறித்துச் சாதனை பல மனித குலத்திற்குக் காட்டிய "ஆழிக்குமரன" ஆனந்தனின் செயலாற்றல்கள் அவரது நான்காவது நூலான பொழுது பலர் வியப்புக் கடலில் மூழ்கி மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தனர்.

தினகரன் பத்திரிகையில் துணை ஆசிரியர் நியமனம் ராஜகோபாலுக்குக் கிடைத்து.

எழுதிக் குவித்தார்!

சினிமாப் பகுதி, கலையரங்கம், இதயராகங்கள் எனவும் பிறவுமாய் பக்கம் பக்கமாக எழுதினார். சந்திரனில் நடுப்பக்கம், அதிகாலைச் சூரியனில் வெளிப்பக்கம். வாகனங்களில் யன்னல் பக்கம் ரசிக்கத் தக்கவை என்பது போல தினகரனின் எல்லாப் பக்கமும் ரசிக்கத்தக்கவை என்று சொல்ல வைத்தார்.

தினகரனில் முதலாம் பக்கம் முதல் கடைசிப்பக்கம் வரை அவரது கைவண்ணம் கண்ட வாசகர்கள் பல்கிப் பெருகினார்கள்.அச்சடித்த நந்தவனமாக அழகாக மலர்ந்தது.

- கைலாசபதிக்கு என்றொரு காலம்!
- ராஜகோபாலுக்கு என்றொரு காலம்!!

கண்ணாடியைக் காயப்படுத்தாமல் பிரியும் பிம்பம் மாதிரி தினகரனிலிருந்து விடுமுறையில் இங்கிலாந்து சென்ற ராஜகோபாலைப் பல கலை விழாக்கள் பிரதம அதிதியாக்கி கௌரவம் தேடிக்கொண்டன.

மீண்டும் ஈழநாட்டில் இணைந்தார். ஆனால் அதுவே தாய்நாட்டை விட்டே துரத்தியடிக்கும் என எதிர் பார்த்திருக்கவில்லை.

85ம் ஆண்டு மார்ச் மாதம் யாழ். முத்திரைச் சந்தியடியில் ஆறுமாத இளம் கர்ப்பிணிப் பெண்மீது சிங்கள ராணுவக் காடையர் பலாத்தகாரம் புரிந்த கொடூரத்தை ராஜகோபாலால் சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. பின்னர் ராணுவத்தாலும் ராஜகோபாலைச் சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை.எப்பொழுதும் திறந்தே இருக்கும் அவரது இதய அறைகளுக்கு கதவு தேவையென்ற நிர்ப்பந்தத்தில்-

இங்கிலாந்து அரவணைத்தது!
ராஜகோபால் ஸ்பரிசித்து தமிழன் பிறந்தான்!
ராஜகோபாலை அழ வைத்து "தமிழன்" பிரிந்தான்!!

தீப்பொறிகளை முடிந்து வைத்திருக்கின்ற பட்டுத்துணி மாதிரி ராஜகோபாலால் பத்திரிகைத் தொழிலை மறக்க முடியவில்லை. லண்டனில் "ஈழகேசரி" பிறந்தது. நிர்வாக ஆசிரியரானார்.

ஈ. கே. ஆர், ராகி, ராகினி, ராகிராஜ், ஷர்மினி, ஷியாம், விசாலாட்சி, பாமா, பவானி, ரங்கன் தேசிகன், கோகிலா தங்கத்துரை என பல்வேறு பெயர்களிலும் ராஜகோபால் வாழ்கின்றார்.

அதனால் ஈ.கே ராஜகோபால் என்ற பெயர் பல்வேறு இதயங்களிலும் வாழுகின்றது!
அவரது பேனா பிறவி எடுத்த பயனை அடைகின்றது.
அவரது பேனா வற்றிவிடாமல் என்றும் எழுதிக்கொண்டே இருக்கவேண்டும்!!

அவரது மனசுக்குள் இருந்து வார்த்தைகள் மலர்ந்து மலர்ந்து வரவேண்டும்!!

-பத்திரிகைத் துறையை அவர் விரும்பினார்!
-பத்திரிகைத் துறை அவரை நேசிக்கின்றது!!

**- எஸ் ஜெகதீசன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் இந்துமத கிரியைகள் சேவை

**சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்**

புங்குடு தீவு-10, இலங்கை - கனேடிய திருமண பதிவு அதிகாரி



அனைத்து இந்துமத கிரியைகளை
வேதாகம முறைப்படி செய்து
கொள்வதற்கும் மற்றும்
திருமணத்திற்குத் தேவையான முத்து
மணவறை, பூமாலை, சடைநாகம்,
தலை நகைசெற், தலைப்பாகை,
மண்டப அலங்காரம் கல்யாண
பூஜைக்குரிய பொருட்கள்
என்பவற்றையும் பெற்றுக்
கொள்வதற்கும், சைவ உணவுச்
சேவைக்கும்...

**Tel:(416) 534 0011**

**243 Marguerетta St.,**
**Toronto, Ontario M6H 3S4**
**(at Bloor & Lansdowne)**

**1247 Ellesmere Rd., Birkdale Plaza**
**(at Brimley & Midland)**




நவீன முறையில் மின் அலங்காரம்,
மண்டப சோடனை அலங்காரம்,
அழகான தரமான முறையில்
அமைக்கப்பட்ட முத்து மணவறை,
நவீன வடிவிலான கதிரை,
மேசைகளுட ன், வாகனம் நிறுத்தும்
வசதி. மண்டபத்திலேயே சிறந்த
ருசிமிக்க சைவ உணவு.அத்தனையும்
ஒரே இடத்தில் அமையப்பெற்ற நான்கு
அடுக்கு மாடி மண்டபம்

**Tel:(416) 534 0011**

**243 Margueretta St.,**
**Toronto, Ontario M6H 3S4**
**(at Bloor & Lansdowne)**

**Marina wedding hall**
**875 St. Clair Ave. West, Toronto.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திருமதி. ராஜம் விவேகானந்தன்.**

### என் புகழாளன்

என் மகன் ஆனந்தனிடம் "இப்படி உடலை வருத்திச் சாதனை செய்வதால் யாருக்கு என்ன நன்மை? மனித சமுதாயம் முன்னேறுவதற்கான சாதாரண எதையாவது நிகழ்த்தக் கூடாதா?" என்று கேட்டதற்கு "அம்மா! இந்தச் சாதனையை மற்றவர்களால் நிகழ்த்த முடியாது. என்னால் முடிகிறது. நிகழ்த்துகிறேன். இதனால் இலங்கையின் புகழ் "கின்னஸ்" புத்தகத்தில் இடம் பெறுகிறது. நான் பத்துச் சாதனைகளை "கின்னஸ்" புத்தகத்தில் பதித்துவிட்டுத் தான் இப் பணியைக் கைவிடுவேன்" என்றான்.

இதன்படி ஏழு சாதனைகளைப் பதித்தான். எட்டாவது சாதனையின்போது அதிலேயே கலந்து விட்டான். அவன் சாதனைகளுக்கான பயிற்சியைத் தானே செய்துகொள்வான். யார் உதவியையும் எதிர்பார்க்கமாட்டான். முடிவெடுத்து விட்டுத்தான் எங்களுக்கே தெரிவிப்பான். அவனுடைய நண்பர்கள் அவனுக்கு உதவுவார்கள்.

ஆனந்தன், சிறு வயதிலிருந்தே எதிலும் வெற்றிபெறவே முயற்சி செய்வான். உழைத்துச் சம்பாதித்ததை சாதனைக்கே செலவு செய்தான். சாதனையில் கிடைக்கும் பரிசுப் பணத்தை ஊனமுற்றோர்க்கே உதவிடுவான். "உனக்கு பணத்தைச் சம்பாதித்துத் தரமாட்டேன். நம் குடும்பத்திற்கு புகழைச் சம்பாதித்துத் தருவேன்" என்பான். அதன்படியே செய்தான். எங்கு போனாலும் "ஆழிக்குமரன் ஆனந்தனின் தாயார்" என்று சொன்னாலே போதும். என்னைத் தெரிந்து கொண்டு எல்லோரும் எனக்கு உதவுகின்றனர். அந்த அளவுக்குப் புகழ்ச் செல்வத்தை தேடிவைத்துவிட்டுப் போயிருக்கிறான். ஆனந்தனின் பிரிவு என்னை வாட்டினாலும் "ஈன்றபொழுதிற் பெரிதுவந்தனளே" என்னும் புறநானூற்றுத் தாயாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

**திருமதி. ராஜம் விவேகானந்தன்.**


நாட்டியம் காலத்தால் மூத்ததும் இளமை குன்றாத சிறப்புத் தன்மையும் வாய்ந்தது. சிந்து வெளி நாகரீகக் கால த்திலிருந்து உலகில் பரவியிருக்கும் இந் நாட்டியத்திற்கு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக பரத முனிவர் இலக்கணம் வகுத்தார். பல வரைமுறைகளும் கோட்பாடு களும் கொண்ட இந் நாட்டியத்தை பயிற்றுவதற்கு அதை முறையுடன் பயின்ற ஒரு ஆசிரியர் அவசியம் தேவை. அப்போது தான் அந்தக் கலையானது பூரணத்துவம் வாய்ந்ததாக இருக்கும். அந்த ஆசிரியரே தாயாகவும் இருந்து விட்டால் அதில் தான் எத்தனை இன்பம்.

செல்வி ஷர்மினி ராஜகோபால் மிகவும் அதிர்ஷ்டசாலி, தாய் ஒரு புகழ் பெற்ற நடன ஆசிரியை, தந்தை ஒரு சிறந்த எழுத்தாளர். இவர்கள் இருவருக்கும் பிறந்த ஷர்மினி எத்தனை திறமைசாலியாக இருக்கவேண்டும். மூன்று வயதுக் குழந்தையாயிருக்கும் போதே ஈழத்தில் வீரசிங்கம் மண்டப அரங்கில் தன் சின்னச் சிறு விழிகளால் மொழி பேசியவர். இக் குழந்தை அதன் பின் தாயின் அன்பும் குருவின் கண்டிப்புடனும் கூடிய பயிற்சியினால் சுமார் நான்கு வருடங்களுக்கு முன் லண்டனில் அரங்கேறி இன்று கனடாத் தமிழருக்கும் தன் திறமையை நிரூபிக்க வந்திருக்கிறார்.

தாயும் சேயுமாக பரதத் திறமையால் எம்மையெல்லாம் ஆட்கொள்ள வேண்டுமென நடராஜப் பெருமானை வேண்டிக்கொண்டு ஷர்மினி, திறமை குன்றாது கலைத்துறையில் முன்னணி நடனமணியாகத் திகழ்வதுடன் வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**வசந்தா டானியல்**
(Diploma in Bharathanatyam & Nattuvangam)
**நாட்டியக்கலாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கற்பகம்

புதிய நிர்வாகத்தில்

இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்

**VIDEO RENTAL**

**AUDIO, CD**

மரக்கறி வகைகள்

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி
மீன், இறைச்சிப் பிரிவும் விரைவில்
திறக்கப்படவுள்ளது என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

# KATPAHAM

**(416) 289 4458**

**864 - 6 MARKHAM ROAD
SCARBOROUGH**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாத் தலைவர்
# திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள்
### (பிரதம ஆசிரியர், தமிழர் தகவல்)
# வழங்கிய செய்தி

ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகை உலகம் 'உதயதாரகை'யுடன் ஆரம்பமானது. எனினும், வாசிப்புப் பழக்கத்துடன் கூடிய பத்திரிகைக் காலம் 1930களிலேயே உருவானது. தினசரிப் பத்திரிகைகளின் வருகை இதற்கு பெரிதும் காரணமாக அமைந்தது. இவ்வகையில் பார்க்கையில், 1930கள், 1960கள், 1980கள் என்ற மூன்று காலகட்டங்களைக் கொண்டதாக ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகை உலகைப் பிரிக்கலாம்.

இதில் இரண்டாம் காலகட்டத்தில் பத்திரிகைச் சாம்ராஜ்யத்தில் காலடி எடுத்து வைத்து, இன்றும் பத்திரிகைத் தொழிலையே தனது முழுநேரத் தொழிலாகப் புரிந்து வருபவர் நண்பர் ராஜகோபால். அவரது பத்திரிகை உலகப் பிரவேசமும், எனது பிரவேசமும் ஓராண்டு கால வித்தியாசமுடையவை; வயதும் அப்படியே. ஏறத்தாழ கால்நூற்றாண்டு காலத்தை இருவரும் பத்திரிகை நண்பர்களாகவும், குடும்ப நண்பர்களாகவும் கழித்துள்ளோம்.

நான் பத்திரிகைத்துறையில் கால் பதிப்பதற்குப் பிரதானமானவர்களில் ராஜகோபாலும் ஒருவர். நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கும்பொழுது 'ஏக' வசனங்களைப் பரிமாறிக் கொள்ளும் உரிமையை இன்றும் எமக்குள் வளர்த்து வருவதற்கு எமக்கிடையிலான அன்புப் பிணைப்பே காரணம். இந்த உரிமையுடன் கலந்த நெருக்கத்தின் காரணமாக, அவரது 'ஆழிக்குமரன்' நூல் வெளியீட்டுக்குத் தலைமை தாங்கும் பெருமை எனக்குக் கிடைத்துள்ளது. மனநிறைவோடு ஏற்றுக் கொண்டுள்ளேன்.

பத்திரிகைத் தொழில் என்பது மிகவும் புனிதமானது. அது தர்மத்தின் வழியானது. 'உண்மையை உண்மையாக எழுதுங்கள்' என்று கூறியுள்ளார் கொழும்புத்துறை தவத்திரு யோக சுவாமிகள். அங்கேதான் பத்திரிகா தர்மம் உருவாகின்றது. புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள தமிழர்கள் மத்தியில் பத்திரிகைத் தொழில் எனப்படுவது குடிசைக் கைத்தொழிலாக மாறிவருவது வேதனைக்குரியது. 'கம்பியுட்டர்' அடிக்கத் தெரிந்தவர்களையெல்லாம் பத்திரிகை ஆசிரியர்களாகப் பார்க்க வேண்டிய சோதனைக் களத்தில் சமூகம் தள்ளப்பட்டு நிற்கிறது. இவர்கள் மத்தியில் தரமான ஓர் பத்திகையாளனாக நண்பன் ராஜகோபால் பிரகாசிப்பதற்கு அவர் பெற்ற பயிற்சியும், திறமையும், எழுத்து வன்மையும், சிறந்த ஆளுமையுமே மூலகாரணங்கள்.

பத்துக்கும் அதிகமான புனைபெயர்களில் பவனி வந்துள்ள ராஜகோபாலின் பேனா மிகவும் கூர்மை வாய்ந்தது; அவரது பார்வை தூரநோக்குடையது; அவரது எழுத்து மற்றவர்களை ஊக்குவிப்பது; கண்டிப்புக்குரியவைகளைத் தயவுதாட்சண்யமின்றிக் கீறிக் கிழிப்பது; மொத்தத்தில் எந்த விடயத்திலும் உயிர்த்துடிப்பு மிகுந்தது. அதனாலேயே பரந்த வாசகர் கூட்டமொன்றைத் தாம் சென்ற இடமெங்கும் அவரால் உருவாக்கிட முடிந்தது.

பத்திரிகை உலகில் சாதனைகள் பல புரிந்த ராஜகோபால், உலகச் சாதனை வீரனான தமிழீழத் தனயன் ஆனந்தனின் வரலாற்றினை நூலுருவில் தந்துள்ளார். எதிர்காலச் சந்ததியினருக்கு அவர் எடுத்துச் செல்லும் பெரும் சொத்து இந்த நூல். இதற்காக அவருக்குத் தமிழ்ச் சமூகம் நன்றிக் கடப்பாடுடையதாக இருக்க வேண்டும்.

நண்பரின் குடும்பம் ஓர் இலக்கிய-கலைக் குடும்பம். மனைவி ராகினி தலைசிறந்த நாட்டிய ஆசிரியை. மகள் ஷர்மினி வளர்ந்து வரும் நாட்டியத் தாரகை. அவர்களது நாட்டியப் பணி மேற்குலகெங்கும் பரவிப் படர்ந்திட மனதார வேண்டுகின்றேன். என்னினிய நண்பனின் எதிர்காலம் மேலும் பிரகாசமாக விளங்க வாழ்த்துகின்றேன். அவரது எழுத்துலகப் பணிகள் சிறந்தோங்கப் பிரார்த்திக்கின்றேன். லண்டனிலிருந்து முதலாவது தமிழ்த் தினசரியை அவர் வெளிக்கொணர வேண்டுமென்ற எனது ஆசையையும் இங்கு முன்வைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி

**நூல் அரங்கம்**

சிரேஷ்ட பத்திரிகையாளரும், பிரபல எழுத்தாளரும், ஈழகேசரி ஆசிரியருமான

**திரு. ஈ. கே. ராஜகோபால்**

எழுதிய

**"ஆழிக்குமரன்" நூல் வெளியீடு**

தலைவர்: **திரு. எஸ். திருச்செல்வம்**

மௌன அஞ்சலி

வரவேற்புரை

**திரு. எஸ். வேலாயுதபிள்ளை**

தலைவர் உரை

**திரு. எஸ். திருச்செல்வம்**

பிரபலங்கள் பற்றிய அறிமுக உரைகள்

**திரு. ஜவகர்லால் நேரு**
(ஆழிக்குமரன் ஆனந்தன் பற்றி)

**திரு.எஸ். ஜெகதீசன்**
(ராஜகோபால் பற்றி)

வெளியீட்டுரை

**கவிஞர். வி. கந்தவனம்**

சிறப்புப் பிரதிகள் வழங்கலும், நூல் விற்பனையும்

சிறப்புரைகள்

**திரு. சிறீக்கந்தராசா**
**திரு. என். லோகேந்திரலிங்கம்**
**கவிஞர். அ. கந்தசாமி**

பதிலுரைகள்

**திருமதி கோகிலா வரதீஸ்வரன்**
(ஆனந்தன் குடும்ப சார்பில்)

**திரு. ஈ. கே. ராஜகோபால்**
(நூலாசிரியர்)

நூலாசிரியர் கௌரவிப்பு

## இடைவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ச்சி நிரல்

**நடன அரங்கம்**

லண்டன் நாட்டியாலயா நிறுவன பிரபல நாட்டிய ஆசிரியை

**ஸ்ரீமதி ராகினி ராஜகோபால் அவர்களின்**

மகளும் - மாணவியுமான இளைய நாட்டிய தாரகை

**செல்வி ஷர்மினி ராஜகோபால் வழங்கும்**

பரதநாட்டிய நிகழ்ச்சி

பிரதம விருந்தினர் **ஸ்ரீமதி வசந்தா டானியல்**

**கலைஞர் அறிமுகம்**

**விநாயகர் அஞ்சலி** ஆரபி - ஆதி

**நடேச கௌத்துவம்** கம்சத்வனி - ஏகம்

**பிரதம விருந்தினர் உரை**

**ஜதீஸ்வரம்** கல்யாணி - ரூபகம்

**பதம் -** சின்னச் சின்ன பாதம் வைத்து - காபி - ஆதி

**பஞ்சநடை**

**திருப்பூங்குன்ற வேலா** ஹிந்தோளம் - ஆதி

**பதம் - ஆடினரே** மோகனகல்யாணி - ஆதி

**தில்லானா** கதன குதூகலம் - ஆதி

**செல்வி ஜெயவேணி வேலாயுதபிள்ளையின்**
**மயில் நடனமும் இடம்பெறும்**

நட்டுவாங்கம்:
**ராகினி ராஜகோபால்**
பாட்டு
**மாதினி சிறீக்கந்தராசா**
வயலின்
**விஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்**
மிருதங்கம்
**கிரிதரன் சச்சிதானந்தம்**

**நிகழ்ச்சித் தொகுப்பு**
**உங்கள்**
**"இதயக் கலைஞன்"**
**இளையபாரதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LAVANYA VIDEO

# லாவண்யா வீடியோ

எம்மிடம் தரமான வீடியோப் பிரதிகளையும் இலங்கை, இந்திய, கனேடிய சஞ்சிகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்

சிறந்த முறையில் பழைய, புதிய பாடல்கள் பதிவு செய்து கொடுக்கப்படும்.



***PYRAMID, PROGLOBAL VIDEO***
***RAJAH, PYRAMID AUDIO, C.D***

***PAL - SECAM - NTSC***
பிரதிமாற்றம் செய்து கொடுக்கப்படும்

அன்பளிப்புப் பொருட்கள், சிறுவர்களின் ஆடைகள், எவர்சில்வர் பொருட்கள் என்பவற்றை மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

## துரித பணமாற்றுச்சேவையும் உண்டு

## (905) 803 9438

**LAVANYA VIDEO**
**1185 DUNDAS STREET EAST**
**MISSISSAUGUA, ONTARIO L4Y 2C6**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஷர்மினி ராஜகோபால்

லண்டனில் என் அன்னையின் பயிற்சியில் இதுவரை நூற்றிற்கு மேற்பட்ட பொது நிகழ்ச்சிகளிலும், ஐந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி இருக்கிறேன். என் அன்னையின் தயாரிப்பில் உருவான "குடி மறந்த குறள்" நாட்டிய நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்றது எனக்கு பெரும் புகழீட்டித் தந்தது.

நிறைந்த பயிற்சிக்குப்பின், என் குருவான என் தாயார், பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் தன் நடன அரங்கேற்றத்தின்போது, தன் கால்களில் பெருமிதத்துடன் கட்டி ஆடிய சதங்கைகளை, கண்ணின் மணிகளாகக் காத்து வந்த அந்தக் கொஞ்சும் சலங்கைகளை எனது பாதங்களில் கட்டி அரங்கத்தில் அரங்கேற்றிய நிகழ்ச்சி இனிய நினைவுகளாய் என்றும் என் இதயத்தில் வாழும்.

அன்று அவள் கட்டிய சலங்கையை, ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அவளே கட்டி ஆட வைத்து அழகு பார்த்து அகமகிழ்கிறாள்.

சதங்கையின் நாதத்தோடு, பரதக் கலையின் உயர் தத்துவங்களைத் தாய்ப்பாலோடு எனக்கு ஊட்டியவள் என் அன்னை!

தாளமும், ராகமும் தான் என் தாய் மடியில் என்னைத் தாலாட்டின..

தவழ்ந்து விளையாடிய என்னை, அன்னையின் தாளம் தான் சின்னச் சின்ன அடி வைத்து நடக்கச் செய்தது.

என் நான்காவது வயதில் தன் தாளத்திற்கு சபையில் ஆட வைத்தவர் என் அன்னை!

எங்கள் குடும்பம் 1985 ல் அகதிகளாக லண்டன் வந்தபோது எனக்கு வயது ஏழு.

அன்னையாகவும், குருவாகவும் அவள் எனக்குக் கிடைத்தது முற்பிறப்பில் நான் செய்த புண்ணியம்.

எனக்கு எல்லாமாக இருந்து, என் விருப்பங்களை யெல்லாம் நிறைவேற்றி வைக்கும் எனது அருமைத் தந்தை - எத்தனை எத்தனை ஜென்மம் எடுத்தாலும் அவருக்கே நான் மகளாக பிறக்கவேண்டும்!

என் தந்தையின் புத்தக வெளியீட்டு வைபவத்தில் எனக்கும் ஒரு சந்தர்ப்பம் தந்து கனடிய அரங்கினில் சுழன்று ஆட வழிவகுத்த நல்லிதயங்களை நன்றியோடு நினைவு கூர்ந்து நடராஜப் பெருமானின் அருள் ஆசியுடன் உங்கள் இதய வாழ்த்துக்களையும் மனதார விரும்பி விடைபெறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயாஸ்

## சுப்பர் மார்க்கட்

உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், மற்றும் இலங்கையில் தயாராகும் பழ ஜாம், பழரசங்கள், பனம் பொருட்க்கள் இத்துடன் தென் இந்திய, மேற்கிந்திய, கனேடியப் பாவனைப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள சிறந்த நிறுவனம்....

உடன் மரக்கறி வகைகள், பால், பழ வகைகள், ஆட்டு இறைச்சி, கோழி இறைச்சி என்பவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் விரும்பும் அனைத்து பாடல் ஒலிப்பதிவு நாடாக்கள், பழைய, புதிய வீடியோப் படங்கள், மற்றும் இலங்கை, இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் உடனுக்குடன் கிடைக்கும்.




# UTHAYA'S
## SUPER MARKET

5010 STEELES AVE. WEST #14, ETOBICOKE
(STEELES& KIPLING)

**Tel: (416) 740 7971 Fax: (416) 740 8568**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆழிக்குமரன் ஆனந்தனின் சாதனைகள்

01. பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தது - 1965.

02. தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி க்கும், பின்னர் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கும் நீந்திக்கடந்தார். 42 மைல் தூரத்தை 52 மணித்தியாலத்தில் - 1975.

03. தொடர்ச்சியாக 1487 மைல் தூரத்தை 187 மணித்தியாலத்தில் சைக்கிளில் ஓடிக்கடந்தார் - 1979 மே.

04. பந்து குத்தும் போட்டியில் தொடர்ந்து 136 மணித்தியாலங்கள் குத்தி சாதனை புரிந்தார் - 1979 டிசம்பர்.

05. இரண்டு நிமிடத்தில் 165 தடவை இருந்து எழும்பி "பஸ்கி" எடுத்தார்.

06. தொடர்ச்சியாக 33 மணிநேரம் ஒற்றைக்காலில் நின்றார்.

**ஒற்றைக்காலில் நின்று சாதனை புரிவதற்கு முன்பாக "பஸ்கி" எடுத்த சாதனையை செய்த ஒரே ஒரு உலகச்சாதனை வீரன் என்ற பெருமை பெற்றார்.**

07. உயர உதைத்தல் தொடர்ச்சியாக 9100 தடவைகள்.

08. தவளைபோல தண்ணீரில் மிதத்தல் - 80 மணித்தியாலங்கள்.

09. தொடர்ச்சியாக 128 மணித்தியாலங்கள் நடனமாடியது.

10. 70 இறாத்தல் நிறையை தோளில் வைத்தபடி அரைமண்டியிட்டு 2000 தடவைகள் 26 நிமிடம் 10 செக்கன்களில்.

11. தொடர்ச்சியாக 149 மணித்தியாலங்கள் நடந்தார்.

12. 22அவுன்ஸ் நிறையுள்ள பிலியட்தடியை 2520 தடவைகள் உயர்த்தியது.

13. 130 இறாத்தல் எடையை தோளில் வைத்துக்கொண்டு ஒற்றைக்காலிலே 6 நிமிடங்கள் நின்றார்.

14. ஐந்து சுருள் கம்பிகளைக் கொண்ட "Chest Expander"றை ஒரு நிமிடத்தில் 38 தடவைகள் இழுத்தார்.

15. கொழும்பில் இருந்து யாழ்பாணத்திற்கு 19 மணித்தியாலங்களில் துவிச்சக்கர வண்டியில் வந்து சேர்ந்தார்.

**தொகுப்பு- கலையரங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THARSHANAS SUPERMARKET

SRILANKAN, EAST INDIAN,
CANADIAN FOOD ITEMS FRESH FISH,
FRESH MEAT, VEGETABLES, VIDEO & AUDIO

VIDEO
AUDIO
GIFTS
CLOTHING
EVER SILVER

**CD $6.99 and up**
**AUDIO $2.99 and up**

தமிழ்
மலையாள
ஹிந்தி
வீடியோப்
பிரதிகளுக்கு
நாடுங்கள்

# தர்ஷனாஸ்
சுப்பர் மார்க்கட்






**உங்கள் சகல தேவைகளையும் ஒரே இடத்தில்**
**பூர்த்தி செய்யும் வண்ணம் மிஸ்ஸிஸாகாவில்**
**அமையப்பெற்ற ஸ்தாபனம்**

**எவர் சில்வர் பாத்திரங்கள் விற்பனைக்குண்டு**

**TEL: (905) 270 7576**

**27 DUNDAS STREET EAST**
**(SIGNATURE PLAZA) MISSISSAUGA ONTARIO L5A 1V9**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நட்டுவாங்கம்:
**திருமதி ராகினி ராஜகோபால்**

**ல**ண்டனில் பிரபல நாட்டிய ஆசிரியையாக புகழ் பெற்றுத் துலங்கும் திருமதி ராகினி ராஜகோபால் தனது மகளான ஷர்மினியின் நடன நிகழ்ச்சிக்கு நட்டுவாங்கம் செய்கின்றார். இந்த நிகழ்ச்சிக்கெனவே லண்டனிலிருந்து வருகை தந்துள்ள இவர், லண்டன் நாட்டியாலயா நிறுவனத்தின் இயக்குனராகவும், நூற்றுக்கு மேலான மாணவிகளுக்கு ஆசிரியையாகவும் இருக்கிறார். 1972ஆம் ஆண்டு தனது அரங்கேற்றத்தைச் செய்த இவர், யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மகா நாட்டில் இரணைச் சகோதரியான வினோதினியுடன் நடனமாடி பல்நாட்டு அறிஞர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் கலாஷேத்திரப் பட்டதாரியான திருமதி சாந்தா பொன்னுத்துரையிடம் நடனம் பயின்ற ராகினி சென்னையில் கலாஷேத்திர வித்துவான் அடையாறு லக்ஷ்மணனிடம் சிறப்பு நடனக் கோர்வைகளையும் நட்டுவாங்கத்தையும் பயின்று அவரது பரதசூடாமணி என்ற ஸ்தாபனத்தின் நற்சான்றிதழும் பெற்றார்.

ராகினியின் ஜதியும், காலப்பிரமாணமும் கலாஷேத்திராவின் கண்டிப்பை எடுத்துக்காட்டுபவை.

பத்து ஆண்டுகளுக்கு மேல் இலங்கையில் நடன ஆசிரியையாகக் கடமையாற்றிய இவர், லண்டனிலும் ஐரோப்பிய, ஆபிரிக்க, ஆசிய மாணவர் பயிலும் உயர்தர ஆங்கிலப் பாடசாலையொன்றில் நுண்கலைப் பிரிவுக்குப் பொறுப்பாளராகவும் நடன ஆசிரியராகவும் பணியாற்றுவதும் அவரது சிறப்புக்குரிய ஒரு அம்சமாகும்.



பாட்டு:
**திருமதி மாதினி ஸ்ரீக்கந்தராஜா**

**கே**ட்டுக் கொண்டே இருக்கவேண்டும் என்பது போன்ற குரலுக்குரிய திருமதி மாதினி ஸ்ரீக்கந்தராசாவும் லண்டனில் இருந்து விசேடமாக வருகை தந்துள்ளார். சுருதி சுத்தமும், கணீரென்று எடுப்பான குரலும் சொற்களில் தெளிவும் உள்ளவர், இந்த மாதினி! லண்டனில் முன்னணிப் பாடகியாகத் திகழும் இவர், ஷர்மினியின் நாட்டிய நிகழ்ச்சிகளுக்குப் பாடும் போது தேனும் பாலும் கலந்துவிட்டது போன்ற உணர்வை ஏற்படுத்தும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரியான இவர் இலங்கையில் இராமநாதன் கல்லூரி, கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராக சங்கீதத்துடன், ஆங்கிலமும் பயிற்றுவித்திருக்கின்றார். மானிப்பாய் ஐயாக் கண்ணு தேசிகரிடமும் ஆரம்ப சங்கீத ஞானத்தைப் பெற்றதை இன்னமும் நன்றியுணர்வுடன் நினைவுகூரும் இவர், லண்டன் சிவில் சேவையில் பணியாற்றுவதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலா வீடியோ

**திருமணம்**

அது வாழ்வில் வசந்தத்தின் வரவு....
அந்த நினைவுகள் உங்கள் வாழ்வில்
பசுமையாய் பதிக்கப்பட வேண்டியவை!....
உங்கள் எண்ணங்களை நாங்கள்
வண்ணத்தில் பதித்துத் தருகின்றோம்!....
புதிய தொலைக்காட்சிக் கமரா மூலம்
அவற்றை அழியாத ஓவியமாக்குகிறோம்....



*Specialist in Arangettam*
*& Stage Programmes*

*Broadcast Quality with*
**3CCD CAMERA**

**NILA VIDEO**

*Contact*
**Victor**
(நிலா-குகதாசன்)
**(905) 472 6976**

PRODUCER OF ILEYANILA இளையநிலா தயாரிப்பாளர்

# ஸ்ரீ வீடியோ புரொடக்ஷன்

**திருமணம் பிறந்தநாள் மற்றும் மங்களகரமான வைபவங்களை**
**சிறந்த முறையில் Special Effects உடன் அழகுமிகு**
**படமாக்க என்றும் முன்னணியில் திகழ்பவர்கள்**



We Specialized in making Movies for Wedding
Birthday & all Occasions with Special Effects

**(905) 471 6850**
**(905) 471 9384**

# SRI VIDEO PRODUCTION


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு சங்கீதமும் சொல்லிக் கொடுத்து வருகின்றார். ஐரோப்பிய நாடுகளில் இவர் கச்சேரிகளுக்கும், இதமான குரலுக்கும் இப்போது தனி மவுசு உண்டு.

தமிழகத்தின் பழம் பெரும் தமிழ் அறிஞரும், சிறந்த மேடைப் பேச்சாளருமான வித்துவான் க.ந. வேலனின் மகள், சட்டமும் தமிழும், ஆங்கிலத்தில் திருக்குறள் போன்ற நூல்களை ஆக்கிய சட்ட வல்லுனர், எழுத்தாளர் செ. ஸ்ரீக்கந்தராசாவின் மனைவி என்ற பெருமைகளும் பாடகி மாதினிக்கு உண்டு.



**வயலின்:**
**திருமதி விஜயலஷ்மி ஸ்ரீநிவாசன்**

இலங்கையில் பத்து வருடங்களுக்கு மேலாக இசை ஆசிரியையாக பல அரசினர் கல்லூரிகளில் கடமை புரிந்த இவர், கடந்த ஏழு வருடங்களாக வாய்ப்பாட்டு, வயலின் வகுப்புக்களை நடத்தி வருகின்றார். ஆரம்பத்தில் தனது சகோதரர் சிவசாமி அவர்களிடம் வயலின் கற்று பின்பு இந்தியாவில் செல்வி. கன்யாகுமரியிடம் தனது பயிற்சியைத் தொடர்ந்தார். சித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை, T.M தியாகராஜன், கல்யாணராமன் ஆகியோரிடம் வாய்ப்பாட்டு, இசை நுணுக்கங்களை முறையாக கற்றவர். கனடாவில் மட்டுமல்லாது அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன் ஆகிய நாடுகளிலும் இசைக் கச்சேரிகளை நடாத்தி பல ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்றவரான இவரது திறமையைப் பாராட்டி அண்மையில் ஒன்ராறியோ மாநில அரசு சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்தது. இவரது கணவன் ஸ்ரீநிவாசன் உயர்ந்த சங்கீத ஞானம் உடையவரும் சிறந்த விளையாட்டு வீரருமாவர்.



**மிருதங்கம்:**
**திரு. கிரிதரன் சச்சிதானந்தம்**

இவர் அளவெட்டியில் திரு கந்தசாமி அவர்களிடம் மிருதங்கம் கற்று கடந்த நான்கு வருடங்களாக கனடாவில் மிருதங்க வகுப்புகளை நடாத்தி வருகின்றார். அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான மிருதங்கப் போட்டிகளில் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் முதலாம் பரிசினை தனதாக்கிய பெருமை இவருக்குண்டு. கனடாவில் பல முன்னணி இசைக் கலைஞர்களின் இசைக் கச்சேரிகளில் பக்க வாத்தியமாக மிருதங்கம் வாசித்து வரும் ஒரு விஞ்ஞான பட்டதாரி ஆவர்.


**வாங்கிப் படியுங்கள்!**

**ராஜகோபால் எழுதிய தமிழீழ வீரர்களின் இரு சாதனை நூல்கள்**

- ஆழிக்குமரன்
- வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்

விபரங்களுக்கு:
எஸ்.வேலாயுதபிள்ளை
12, KEON PLACE
SCARBOROUGH, ONTARIO.
TEL:(416) 283 4546


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சுளா (F)பஷன்

**மலிவு விலையில் சாதனை படைத்த மஞ்சுளா பேஷனின் கோடைக்கால மாபெரும் மலிவு விற்பனை!**

**ஆகஸ்ட் 27ம் திகதி தொடக்கம் செப்டம்பர் 05ம் திகதி வரை**

புத்தம் புதிய டிசைன்களில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவநாகரிக மங்கையருக்குரிய சகலவிதமான உடுப்பு வகைகள், ஆண்களுக்குரிய கால்சட்டை, சேட் வகைகள் சிறுவர் சிறுமியருக்கான உடுப்பு வகைகள் இன்னும் பல... பல...

சர்வாணி சூட், தலைநகை, தலைப்பாகை குறைந்த விலையில் வாடகைக்கு விடப்படும்

Decorative Ornaments Luxury items
Ever Silver - Immitaion Jewellery
Gifts Toys - Religious items
Cultural items etc., etc....

(416) 297 9875
(416) 297 5872
5818 Sheppard Avenue East, #203,
Scarborough, Ontario

# MADONNA'S

ONE HOUR FOTO STUDIO

PROFESSIONAL PHOTOGRAPHERS

1 Hour Film Development
Passport Photos in 3 Minutes
Portraits in 1 Hour
Copy Work, Reprints in 30 Minutes

(416) 754 0326
3850 Finch Ave. East, # G01A
(At Kennedy)
Scarborough, Ontario
M1T 3T6

(416) 787 5563
1184 Eglinton Ave. West
(Near Eglinton W. Subway)
Toronto, Ootario
M6C 2E3

(416) 923 1769
240 Wellesley Street East, #4
(Parliament & Wellesley)
Toronto, Ontario
M4X IG5

PHOTOS TAKEN WITH SANTA EVERY YEAR

FOR MORE INFORMATION PLEASE REFER SINGLE COLOUR ADVERTISEMENT LISTED UNDER PHOTOGRAPHY SECTION.

THREE LOCATIONS TO SERVE YOU


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கொண்டாட்டத் தேவைகள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

# gns PARTY RENTALS

FOR ALL YOUR PARTY NEEDS








மண்டப அலங்காரங்கள்
பொறுப்பேற்றுக்கொள்ளப்படும்




***We Sell***

Balloons
Decorations
Disposable Party Supplies
Helium

We also under take
Balloon decorating
& Balloon imprinting

எங்களிடம் திருமணம்,
பிறந்தநாள்
வாழ்த்துக்கள் போன்ற
தமிழில் அச்சிட்ட
பலூன்கள் விற்பனைக்குண்டு.

***We Rent***

Tables - Chairs - china
Cutlery - Chafing Dishes
Linen - Coffee Ums - Bud Vases
Large Pots
Propane Burners etc.

***(416) 288 1977***

1209 Ellesmere Road Scarborough
(Midland & Ellesmere)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LANGA EMPORIUM
## லங்கா எம்போறியம்

இலங்கை இந்தியாவிற்கு
உடன் பணம் அனுப்பி வைக்கப்படும்

வீடியோக்களை பிரதி
மாற்றம் செய்து கொள்ள

**$9.99**

(PAL, SECAM, NTSC)
Following day Service)

பழைய, புதிய, தமிழ், மலையாள, ஹிந்தி வீடியோக்களுக்கும் திரைப்பட திரைப்பட ஒலிப்பதிவு (பிரமிட் டேப்) நாடாக்களுக்கும் நகரில் சிறந்த இடம்.

தலைப்பாகை, தலைநகை
வாடகைக்கு விடப்படும்

## TEXTILES

இறக்குமதி செய்யப்பட்ட
எவர் சில்வர் பாத்திரங்கள்
தங்க நகைகள்
கூறைச் சேலைகள்
குருதா செட்
பட்டு வேட்டிகள்
பரிசுப் பொருட்கள்
சிறுவர், சிறுமியர்க்கான
உடைகள்
ஆண்களுக்கான
ரவுசர், சேர்ட்
விளையாட்டுப் பொருட்கள்
மற்றும் குடும்பத்திலுள்ள
அனைவருக்கும்
தேவையானவற்றைப்
பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்

**Tel: (416) 321 3743**
Unit 204&205 3852 Finch Ave. E.
**Tel:(416) 960 9304**
560 Parliament St., Toronto, Ontario M4X 1P8

ஏழு நாட்களும் 10 மணிமுதல் இரவு 10 மணிவரை திறந்திருக்கும்

**GROCERY SECTION**
**Unit 10, 3852 Finch Ave. E.**
**Scarborough, Ontario M1T 3T9**


ஆனந்தா!

**உலக அரங்கில்**
**சாதனைகள் பல**
**நிலைநாட்டிய**
**உன்னைப் போல**
**மேலும் பல தமிழர்கள்**
**தோன்ற வேண்டுமென்பது**
**உனது ஆசையும்**
**எமது அவாவும்.......**

**குமார் ராஜேந்திரம்**

publications

**nanda publications**
4 Baldoon Road Scarborough,
Ontario. M1B 1V7. Canada
Tel: (416) 321 1354 Fax: (416) 321 3944


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GENERAL TOURS

*Spectacular South Indian Tour........ October 1994*



**Special Fares to**

**Colombo**

**Singapore**

**Madras**

**Far East**

அனுபவம், திறமை மிகுந்த ஊழியர்கள் மூலம் "ஜெனரல்" டுவர்ஸ" எல்லா விமானச் சேவைகள், சாட்டர்சேவைகளில் மிகக்குறைந்த கட்டணத்தில் பயணங்களை அளிக்கிறது

இலங்கை, இந்தியா, பாக்கிஸ்தான், பங்களாதேஷ் கிழக்காபிரிக்கா, மற்றும் லண்டனுக்குப் பிரயாணம்

புளோரிடா, கலிபோர்னியா, கரிபியன், நாடுகளுக்கு விசேட பயண ஏற்பாடுகள்

உங்கள் கார் வாடகை, ஹோட்டல் பதிவுகள், விமானக் காப்புறுதிகள் போன்றவற்றை நாம் கையாள்வோம்

உங்கள் பிரயாணத் தேவைகளை மொன்றியல் தலைமையகம் ஒட்டாவா, வினிபெக் கிளைகள் உட்பட ஜெனரல் டுவர்ஸ் அலுவலகங்கள் பூர்த்தி செய்யும்

உங்கள் அனைத்து விமான பதிவுத் தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

## SELUA (செல்வா)

## Tel: (416) 363 5555

**Toronto (Down Town)**
**27 Queen Street East (at Victoria)**

## Fax: (416) 363 3488



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI & BROTHERS


## ஸ்ரீ அன் பிறதர்ஸ்

நங்கையர் மனங் கவரும் நவ நாகரீக ஆடைகளுக்கும்
வாலிப உள்ளங்களை கொள்ளை கொள்ளும் ஜீன்ஸ், சேட் வகைகளுக்கும்
RAJA, RAMY, PYRAMID - CD க்களுக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்

## ஸ்ரீ அன் பிறதர்ஸ்


இத்துடன் எமது ஸ்தாபனத்திற்குள்ளேயே
இயங்கிக் கொண்டிருக்கிறது

**" POWER-OPTICAL "**



உங்கள் மூக்குக் கண்ணாடித்
தேவைகளையும் பூர்த்தி செய்கிறார்கள்

எமது ஸ்தாபனத்திற்குள்ளேயே
நடன, மிருதங்க வகுப்புக்களும்
நடைபெற்றுக்கொண்டிருக்கிறது



Special
Video Transfer
Only $9.99
(With Cassette)

சிங்கப்பூரிலிருந்து வரவழைக்கப்பட்ட தங்க நகைகளுக்கும்
உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு பாடல்களை சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்யவும்
எமது ஸ்தாபனத்தை நாடுங்கள்

**இலங்கை, இந்தியா, ஐரோப்பியா நாடுகளுக்கு**

## துரித பணமாற்றுச் சேவை

**SRI & BROTHERS**
**1801 Lawrence Ave. East,**
**Unit #5 Scarborough, Ont.**
**(Lawrence/Pharmacy)**

**TEL/FAX:**
**(416) 752 9960**

PMJ PRINTERS
(416) 757-0406

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org